# சிலப்பதிகாரத்தில் அடைக்கலப் பண்பாடு – ஓர் ஆய்வு

*முனைவர் கீ.வே. சுபாஷிணி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல
கண்ணன் செட்டி இந்துக்கல்லூரி, பட்டாபிராம் சென்னை
https://doi.org/10.5281/zenodo.14383218

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உரியது. பிறமொழிகளில் எழுத்துக்கும், சொல்லுக்கும், அணிக்கும், யாப்பிற்கும் இலக்கணம் உண்டு. தமிழ் மொழியில் மட்டும் தான் வாழ்க்கைக்கு பொருள் இலக்கணம் வகுத்துள்ளனர் இந்த பொருள் இலக்கணம் அகம்,புறம் என்று இருவகைப்படும். உள்ளத்து உணர்வுகளால் இசைந்து,இயைந்து வாழ்வதே பண்பாடாகும்.*

*குணம், இயல்பு, வழக்கம், பழக்கம் என்பது பண்பாடு சொல்லிற்கு நுட்பமான பொருளைத் தருவதாக அமைகிறது. அன்பு, அடக்கம், அருள், செறிவு, பொறை,நிறை, பெருமை, வாய்மை, மனிதநேயம் ஆகிய அணைத்தும் பண்பாகும். ஒருவரின் இயல்பு தன்மைக்கு ஏற்ப மற்றவர் நடப்பதே பண்பாடாகும்.*

*பண்பு என்ற சொல் கன்மை, முறைமை என்ற பொருளில் சிலம்பில் பயன்படுத்தப்பெறுகிறது. பண்பு பல நிலைகளில் அமையும் தனிமனித பண்பாடு, சமுதாயப் பண்பாடு, மறவர் பண்பாடு, அரசர் பண்பாடு, வேட்டுவர் பண்பாடு, ஆய்ச்சியர் பண்பாடு, அடைக்கலப் பண்பாடு போன்ற பல நிலைகளில் அமையக்கூடிய பண்பாடுகளை சிலம்பில் காணலாம்.*

*உலகக் காப்பியங்களுள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் புரட்சியும் புதுமையும் உடையது. சிலப்பதிகாரத்தில் அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்தோம்பல், இன்னார்க்கும் இனியன செய்தல், செய்ந்நன்றி மறவாமை, எளியோர்க்கு உதவுதல், அடைக்கலம் காத்தல் முதலிய இன்னோரன்ன பண்பாடுகளைக் காணலாம். அவற்றுள் இங்குச் சிலப்பதிகாரம் போற்றும் அடைக்கலப் பண்பாட்டைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*இளங்கோவடிகள் காட்டும் பண்பாடு, அடைக்கலம்- சொல்லாட்சி, அடைக்கலம் – சிறுவிளக்கம், அடைக்கலம்-சிறப்பு, புறாவின் அடைக்கலம், பசு நீதி கேட்டு -அடைக்கலம் கண்ணகி – அடைக்கலம்.*

**முன்னுரை**

*தமிழ் மொழியில் முதன்முதலாக தோன்றிய காவியம் என்னும் பெருமைக்குரிய நூல் சிலப்பதிகாரம். உலகக் காப்பியங்களுள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் புரட்சியும் புதுமையும் உடையது. பெண் பெருமை பேசும் காப்பியம் வரலாற்றுக் காப்பியம் என்ற பெருமைகளைத் தன்னகத்தே கொண்டது. மனித சமுதாயம் கலாச்சாரம், பண்பாடு, கல்வி போன்ற பல்வேறு பிரிவுகளில் ஒருங்கிணைந்து உள்ளது. சிலப்பதிகாரத்தில் அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்தோம்பல், இன்னார்க்கும் இனியன செய்தல், செய்ந்நன்றி மறவாமை, அடைக்கலம் காத்தல் முதலிய இன்னோரன்ன பண்பாடுகளைக் காணலாம். அவற்றுள் இங்குச் சிலப்பதிகாரம் போற்றும் அடைக்கலப் பண்பாட்டைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**அடைக்கலம் - சொல்லாட்சி**

*சங்க நூல்களில் திருக்குறளில் இடம் பெறாத அடைக்கலம் என்னும் சொல்லாட்சி முதன்முதலில் சிலம்பிலேதான் இடம்பெற்றுள்ளது. இளங்கோவடிகள் முப்பது காதைகளுள் பதினைந்தாவது*

*காதையை அடைக்கலக்காதை என அமைத்துள்ளார்.*

*மேலும் இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன் (சிலம்பு 15 :130), என்றும் சீர்சானங்கை அடைக்கலக் காதையும் (பதிகம் 175,என்றும் தவத்தோர் அடைக்கலம் தான் சிறியதாயினும் (15:149) என்றும், அரும்பெரும் பாவையை அடைக்கலம் பெற்ற (16-1 என்றும் மாதரி தன்னுடன் மடந்தையை இருந்துதற்கு (15-123) என்றும், ஐயந்தீர் சாட்சி அடைக்கலம் காத்தோம்ப வல்லாதேன் (29: 8) என்றும், அடைக்கலம் இழந்தேன் இடைக்குல மாக்கள் (27:76) என்றும், பல்வேறு இடங்களில் அடைக்கலம் என்னும் சொல்லாட்சி இடம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது.*

**இளங்கோவடிகள் காட்டும் பண்பாடு**

*தொல்காப்பியத்தில் பண்பு என்ற சொல்லுக்குச் குணம், இலக்கணம், இயல்பு வழக்கம் என்னும் பொருளினைத் தருகின்றன என்பதை, நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே (தொல்-1422-6) என்ற தொல்காப்பிய நூற்பவின் மூலம் அறியலாம். ஒருவரின் இயல்பு தன்மைக்கு ஏற்ப மற்றவர் நடப்பதே பண்பாடாகும் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் (நெய்தற் கலித் பா -16) என்று கலித்தொகை கூறுகிறது.*

*மேலும் திருவள்ளுவர்,*

***பண்புடையாரப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்***
***மண்புக்கு மாய்வது மன் (குறள் -996)***

*என்று பண்பாடு பற்றி விளக்கம் தந்துள்ளார்.*

*இப்பண்பாட்டினை, அடையர் முனை அகத்து அமர் மேம்படுநர்க்குப படை வழங்குவது ஓர் பண்பு உண்டு (சிலம்பு 2;42-43). என்ற வரிகள் உணர்த்துகின்றன. இதனை இளங்கோவடிகள் இல்லத்தோர்க்கு உரிய பண்பாடு, சமுதயாத்தில் வாழும் மக்களுக்கு உரிய பண்பாடு, ஒரு நாட்டை ஆளும் மன்னர்களுக்கு உரிய பண்பாடு என பல பிரிவுகளாக சிலம்பில் கூறியுள்ளதை காணலாம்.*

**அடைக்கலம் -விளக்கம்**

*ஒருவர் தன்னைக் காக்குமாறு மற்றொருவரிடம் தன்னை ஒப்படைதல் அடைக்கலமாகும். புறா பருந்திடம் இருந்து காக்குமாறு சிபிச் சக்கரவர்த்தியை அடைந்ததும், சுக்ரீவன், வீடணன் ஆகியோர் இராமனை அடைந்ததும் இவ்வகையைச் சாரும். கவுந்தியடிகள் கண்ணகி, கோவலனை மாதரியிடம் ஒப்படைத்தது இவ்வகையைச் சாரும். பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை.... வீடு பெற்று உயர்ந்த வார்தை வேதத்தின் விழுமி தன்றோ (அடைக்கலப் படலம் பா : 112) என்பதை அறியமுடிகிறது*

**அடைக்கலத்தின் சிறப்பு**

***மதுரையில் கவுந்தியடிகள் மாதரியிடம்***
***தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்***
***மிகப்பே ரின்பம் தரும் அது கேளாய்***
***(சிலம்பு 15-:149-150 )***

*என்று குரங்குக்கை வானவன் கதையைக் கூறுவதிலிருந்து அடைக்கலத்தின் சிறப்பை உணரலாம். அனுமன் இராமனிடம் நடுங்கினர்க்கு அபயம் நல்கும் அதனினும் நல்லது உண்டோ (கிட்நட்பு கோள் படலம் பா.107) என்றும் உம்மையே புகல்புக் கேமுக்கு இதனின் வரும் உறுதி உண்டோ (பா 71) என்றும், கூறுவதை காணமுடிகிறது. அனுமன் கூற்றிலருந்து நல்லனவற்றுள் அடைக்கலமே மிக நல்லது என்பதும் உறுதிகளுள் அடைக்கலமே சிறந்த உறுதி என்பதும் புலனாகும். சரண் உனைப் புகுந்தேன் என்னைத் தருமம் என்றான் (கம்ப நட்புக் கோள் படலம் பா- 107) என்பதால் அடைக்கலத்தைக் ஏற்பதும் காப்பதும் தலை சிறந்த அறம் என இளங்கோவடிகள் சிலம்பின் வழி கூறியுள்ளதை அறியமுடிகிறது.*

**புறாவின் அடைக்கலம்**

*தன்னைத் துரத்தி வந்த பருந்துவிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு சிபிச் சக்கரவர்த்தியிடம் புறா அடைக்கலம் புகுந்தது. சிபி மன்னன் புறாவைக் காபாற்றத் தன் ஊனையும்*

உயிரையும் நீத்து நிலைத்த புகழைப் பெற்றான், இதனை

**எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன்**

**(சிலம்பு-20 :51-52)**

என்ற கண்ணகி வாயிலாக அறிய முடிகிறது. இத்தொடர் எள்ளறு சிறப்பின் தீர்த்தோன், வியப்பத் தீர்த்தோன், புன்கண் தீர்த்தோன் எனத் தொடர் அமைத்துப் பொருள்நயம் பட கூறியுள்ளது சிறப்பிற்குரியது. இதனை நூல்கள் பலப் பாராட்டியுள்ளதை,

புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல் சீனம்கெழு தானைச் செம்பியன் மருக (புறம் - 37) புறவின் புல்லல் சொல்லிய கறைபடி, யானைவான் மருப்பெறிந்த வெண்கடைக் கோணிறை துலாஅம், புக்கோன் மருக (புறம் -39). கொடுஞ்சிறைக் கூருகீரப் பருத்தினேரு குறித்தொரீஇத் தன்னகம் புக்க குறுநடைப் புறவின் தபுதி அஞ்சிச் சீரைபுக்க, வரையாவினக உரவோன் மருக (புறம்-43) நீயேபுறவின்அல்லலன்றியும், பிறவின்பலவும் விடுதோன்மருகனை(புறம்-46) என்று எல்லாம் புறநானூறு பாராட்டியுள்ளது. மேலும் உடல் கலக்கற வரிந்து தடையிட்டு ஒருவன் ஒருவனைப் புறவோடொக்க நிறைபுக்க புகழுக (கலிங்க -இராச -93) எனவும், கூறுவதை அறியமுடிகிறது. இவ்வகையில் புறவின் அடைக்கலத்தைச் சிபியின் ஈகத்தைப் பலரும் புகழுந்துள்ளதை குறிப்பிடதக்கது.

**பசு நீதி கேட்டு அடைக்கலம்**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்**
**அரும்பெரும் புதல்வன் ஆழியின் மடித்தோன்**

**(சிலம்பு- 20: 52-53 )**

என்பதால் பசு நீதி கேட்டு அடைக்கலம் புகுந்ததை அறியலாம். மனுநீதிச்சோழன் கண்ணோடாது ஓர்ந்து தேர்ந்து முறை செய்ததைக் கண்ணகி பாண்டியனிடம் சுட்டிக் கட்டினாள். கறவைக் கன்று ஊர்ந்தானத் தந்தையும் ஊர்ந்தான் (பா -3) என்று பழமொழி பாராட்டியுள்ளது. இதன் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணமும் வள்ளலாரின் மனுமுறைகண்ட வாசகமும் விரிவாகக் கூறியுள்ளன. இங்ஙனம் அக்கால அரசர்கள் குறை வேண்டி வந்தோர்க்கும், முறைவேண்டி வந்தோர்க்கும் அடைக்கலம் தந்து சிறப்பாக ஆட்சி செய்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

### கண்ணகி அடைக்கலம்

புறாவும் பசுவும் தாமே அடைக்கலம் அடைந்தன. கண்ணகி அடைக்கலம் கவுந்தியடிகளால் கொடுக்கப்பெற்றது மதுரை புறஞ்சேரியில் இயக்கியயை வழிபட வந்தவளான மாதரியிடம்

**உடைப்பெரும் செல்வர் மனைப்புகும் அளவும்**
**இடைக்கல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்..**
**ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்**
**தாயும் நீயே ஆகித் தாங்கு**

**(சிலம்பு:15:129-136)**

எனக் கவுந்தியடிகள் கூறிக் கண்ணகியை அடைக்கலம் தந்தார் என்பது புலனாகிறது.

### மாதிரியின் அடைகலப்பெருமை

நீர்ப்படைக்காதையில் மாடலன் செங் குட்டுவனிடம் மாதிரியின் அரும்பெருஞ் செயலைப் கூறும்போது,

**ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்**
**கோவலர் வாழ்க்கை கொடும்பாடு இல்லை**
**தீதிலள் முதுமகள் செவ்வியள் அணியள்**
**மாதரி தன்னுடன் மடந்தையை இருத்தற்கு ஐதிகம்**
**ஏதம் இன்று (சிலம்பு 15:120-124)**

எனக் கவுந்தியடிகளால் மாதரி பாராட்டப் பெற்றவள் என்பது குறிப்பிடதக்கது.

மதுரையி ல் கண்ணகி தன் சிலம்பால் வென்று மதுரையைத் தீக்கரையாக்கி, மேற்கு நோக்கி நடந்தாள் இதனை அறிந்த மாதரி கோவலன் தீதலன்; நம் வேந்தன் செங்கோன்மை தவறினான், பாதுகாக்க வேண்டிய அடைக்கலப் பொருளை இழந்துவிட்டேன், அரசனின் வெண்கொற்றக் குடையும், செங்கோலும் தவறு இழைந்துவிட்டனவே (சிலம்பு 27: 74 -77) என்று கதறி அழுது எரிமுட்டி அதில் வீழுந்து மாண்டு போனாள். கண்ணகிக்கும், மாதரிக்கும் எந்தவிதக்குருதி உறவோ ஊர் உறவோ, நாட்டுறவோ எவையுமில்லை, அடைக்கலப்

*பொருளைக் காக்க இயலாமையால் உயிர் துறந்த மாதரி மடந்தை நம் நெஞ்சில் வாழும் தெய்வமாவாள் மாதரின் அருஞ்செயலை மாடலன் செங்குட்டுவனிடம் கூறியதை அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*இம்மையில் மறுமையில் இனிது விளங்க இறைவன் நாளை அடைக்கலமாக அடையுங்கள் என்றார் வள்ளுவர். அதுபோல சிலப்பதிகாரம் போற்றும் அடைக்கலச் சிறப்பை உணர்ந்து நாடி வந்தோர்க்கு நல்லுதவிகள் செய்து இறைவன் தாளை அடைக்கலமாப் பற்றிக் கொண்டு வாழ்வதே வாழ்வாங்கு வாழ்தலாகும்.*

## References

1. Adiyarku Nallar, "Silapathikaram Source and Texts" parry nilayam Chennai 1997.
2. Gnanasambathan A, S "Kambaramayanam," New Century Book House 2012.
3. Ilamporanaar, "Tholkappiyam - Source and Text" Saradha Publishing House 2011.
4. Pulavar Manikanaar "Purananooru" varthamanan publicatios, Chennai 2008.
5. Pulavar Mu. Selvanathan "Kambaramayanam," Sree Hindhu Publications. Chennai 2018.
6. Pulavar Manikanaar "Pazhamozhinanooru" varthamanan publicatios, Chennai 2008.
7. Pulavar Manikanaar "Kalidhokai- Source and Text"varthamanan publicatios 2010.
8. Paerarasiriyar Sundarashanmuganaar "Thirukural thaelivu" Pombukaar pathipakkam 2019.

**துணை நூற்பட்டியல்**

1. *அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் மூலமும் உரையும் பாரிநிலையம் சென்னை 1997*
2. *இளம்பூரனர், தொல்காப்பியம் சாரதா பதிபக்கம் சென்னை 2006*
3. *பேராசிரியர் சுந்தரசண்முகனார் திருக்குறள் தெளிவு பூம்புகார் பதிபக்கம் 2019.*
4. *புலவர் மு. செல்வநாதன் கம்பராமாயணம், ஸ்ரீ இந்து பப்ளிக்கேஷன்ஸ் 2018*
5. *அ.ச, ஞானசம்பந்தன் கம்பராமாயணம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 2012*
6. *புலவர் அ.மாணிக்கனார் கலித்தொகை மூலமும் உரையும் வர்த்தமானன் பதிபக்கம் 2003.*
7. *புலவர் அ.மாணிக்கனார் பழமொழி நானூறு வர்த்தமானன் பதிபக்கம் 2005*
8. *புலவர் அ.மாணிக்கனார் புறநானூறு மூலமும் உரையும் வர்த்தமானன் பதிபக்கம் 2003*